# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 25 - 2017

- ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் புதிய மசோதா லோக்சபாவில் 24.07.2017 அன்று நிதியமைச்சர் அருண்ஜெட்லியால் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மசோதாவின் படி வங்கிகளின் வராக்கடன் பிரச்சனைக்கு தீர்வாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி நேரடியாக உத்திரவிட அனுமதிக்கும்.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னால் தலைவரும் பிரபல விண்வெளி ஆராய்ச்சியாளருமான உடுப்பி ராமச்சந்திர ராவ்(வயது 85) ஜூலை 24 அன்று காலமானார். இவர் கர்நாடக மாநில உடுப்பி மாவட்டத்தைச் சேர்ந்தவராவர்.

- இந்துஸ்தான் பெட்ரோலியத்தில் அரசுக்குசொந்தமான 51 சதவீத பங்குகளையும் அந்நிறுவனத்தை கட்டுப்படுத்தும் உரிமையையும் ஓ.என்.ஜி.சி நிறுவனத்திற்கு விற்க திட்டமிட்டுள்ளது. இதற்கு பொருளாதார நிறுவனங்களுக்கான கேபினட் குழு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தது.

- கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்ற பிரெஸிடென்ட் கோப்பைக்கான ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் விஷ்ணுவரதன், ஜப்பானின் டோஷிஹைடு மட்சுய் ஜோடி ரஷியாவின் ஈவ் ஜெனி கர்லோவ்ஸ்கை, ஈவ் ஜெனி டியூர்னெவ் ஜோடியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது.

- உத்திரபிரதேச மாநிலத்தில் பெண்கள் பாதுகாப்பாக பயணம் செய்யவேண்டும் என்பதற்காக இளம் சிவப்பு வண்ணத்தில் பெண்களுக்கு தனி பேருந்துகளை இயக்க முதல்வர் யோகி ஆதித்யானந்தா உத்திரவிட்டுள்ளார்.

- தெலுங்கானா மாநிலம் கும்ரம் பீம் ஆஸிபாபா மாவட்டத்தில் உள்ள தடோபா அந்தாரி புலிகள் சரணாலயத்தில் இந்தியாவின் முதல் “சுற்றுச்சூழல் நட்பு பாலம் (ECO – Frindly Bridges) அமைக்கப்படவுள்ளது.

- ஐந்தாவது தென்னிந்திய எழுத்து படைப்புகள் கூட்டம் (South India Writers Ensemble - SIWE) 2017, ஜுலை மாதம் 23-ம் தேதி முதல் கேரள மாநிலத்தின் ஆலப்புழா மாவட்டத்தில் செங்கன்னூரில் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இந்த படைப்பாளிகளின் கூட்டத்தின் முக்கிய கருத்துகளாக “சகிப்புத்தன்மை” உள்ளது.

- பெங்களூரில் சமூக நீதிக்கான அம்பேத்கர் சர்வதேச மாநாடு (B.R.Ambedkar International Conference on Social Justice) 2017 ஜுலை 21 முதல் 23 வரை நடைபெற்றது. இம்மாநாட்டை கர்நாடகா அரசு நடத்தியது.

- 2021-ல் ஆடவர் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா முதன்முதலாக நடத்தவுள்ளது. இதோடு 2018-ல் பெண்கள் உலக குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியையும் இந்தியா நடத்தவுள்ளது.

- “உலக இந்திய உணவு கண்காட்சி 2017” வருகிற நவம்பர் 3-5 தேதிகளில் புது டில்லியில் நடைபெறவுள்ளது. இந்த கண்காட்சியில் மேற்கு வங்காள மாநிலத்தின் வெவ்வேறு வகையான உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

- ஆசிய யூத் மற்றும் ஜுனியர் பளுதூக்குதல் போட்டியில் மகளிர் 44 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் கொன்சாம் ஊர்மிளாதேவி தங்கப் பதக்கம் வென்றார்.

- ஒலிம்பிக் போட்டியில் தனிநபர் பிரிவில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் ஏலத்துக்கு வருகிறது. 1952-ம் ஆண்டு பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்த பிரிவில் இந்தியாவின் காஷாபா ஜாதவ் வெண்கல பதக்கம் வென்றார். ஒலிம்பிக் போட்டியில் தனிநபர் பிரிவில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும்.

- வோடாஃபோன் ஐடியா நிறுவனங்களின் இணைப்பிற்கு காம்படிஷன் கமிஷன் ஆஃப் இந்தியாவின் அனுமதி கிடைத்துள்ளது. இந்த இணைப்பின் மூலம் மிகப்பெரிய மொபைல் நிறுவனமாக புதிய நிறுவனம் உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.